## அடல் ஓய்வூதியத் திட்டம் (ஏபிஒய்)- சந்தாதாரர் தகவல் கையேடு

- ஏபிஒய் , 60 வயதிற்குப் பிறகு ரூ 1000, ரூ 2000, ரூ 3000, ரூ 4000, ரூ. 5000. என இந்திய அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட குறைந்தபட்ச மாதாந்திர ஓய்வூதிய விருப்பத் தேர்வை வழங்குகிறது.
- ஏபிஒய் கணக்கு திறக்க, சந்தாதாரர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். அவர் வயது 18 முதல் 40 க்குள் இருக்க வேண்டும். அக்டோபர்/01/2022 முதல், வருமான வரி செலுத்துவோர் ஏபிஒய் திட்டத்தில் சேரத் தகுதியற்றவர்கள்
- வங்கிக் கிளைகள்/தபால் நிலையம் அல்லது வங்கிகள் வழங்கும் டிஜிட்டல் உள்வாங்கும் தளங்களின் மூலம் சந்தாதாரர் ஏபிஒய் திட்டத்தில் சேரலாம்.
- ஏபிஒய் கணக்கு திறக்கும் போது நியமனதாரர் மற்றும் கணவன்/மனைவி பற்றிய தகவல்களை வழங்குவது கட்டாயமாகும்.
- சேமிப்பு வங்கிக் கணக்கிலிருந்து ஆட்டோ டெபிட் வசதி மூலம் மாதாந்திர அல்லது காலாண்டு அல்லது அரையாண்டு அடிப்படையில் பங்களிப்புகளைச் செய்யலாம்.

## 60 வயதில் அடல் ஓய்வூதியத் திட்டம் (ஏபிஒய்) வில் கிடைக்கும் மூன்று நன்மைகள்

- சந்தாதாரருக்கு வாழ்நாள் முழுவதும் ரூ 1000 முதல் ரூ 5000 வரை குறைந்தபட்ச ஓய்வூதியத்திற்கான உத்தரவாதம்.
- சந்தாதாரரின் மரணத்திற்குப் பிறகு அதே ஓய்வூதியம் அவர் கணவன்/மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.
- சந்தாதாரர் மற்றும் அவர் துணைவரின் மரணத்திற்குப் பிறகு 60 வயது வரை திரட்டப்பட்ட ஓய்வூதிய பணம் , நியமனதாரருக்கு தரப்படும் .

## ஏபிஒய் இன் கீழ் PRAN, பரிமாற்ற அறிக்கைகள் மற்றும் பங்களிப்பு

- பரிமாற்ற அறிக்கை மற்றும் PRAN அட்டையை எந்த நேரத்திலும் இலவசமாக www.npscra.nsdl.co.in>> Home>>Atal pension Yojana>> APY e-PRAN/Transaction statement view வில் பார்த்து அச்சிட்டுக் கொள்ளலாம்
- சந்தாதாரர் இணையதளத்தில் தேவையான தொகையைக் கட்டிய பிறகு https://enps.nsdl.com/eNPS/APYRePrintPRAN.html>>Atal Pension Yojana>>Print APY PRAN Card லிருந்து PRAN அட்டையை அச்சிட்டுக் கொள்ளலாம்.
- அடல் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவான பிறகு, பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு அதாவது அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யச் சந்தாதாரர் வழங்கிய முகவரிக்கு வருடத்திற்கு ஒருமுறை பரிமாற்ற அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.
- பங்களிப்புகளின் நிலை குறித்த தகவல்கள், சந்தாதாரரின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு நிலையான இடைவெளியில் குறுஞ்செய்தி எச்சரிக்கைகள் மூலம் Protean-CRA ஆல் தெரிவிக்கப்படும்.
- இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் DIGI-LOCKER லும் E-PRAN கிடைக்கும்.

## ஏபிஒய் இன் கீழ் சந்தாதாரர் விவரங்களை புதுப்பித்தல்/மாற்றுதல்

- ஏபிஒய் சந்தாதாரர் மாற்றப் படிவத்தில் விரும்பிய மாற்றங்களை நிரப்பி முகவரி, தொலைப்பேசி எண் போன்ற தனிப்பட்ட தகவல்களை மாற்றுவதற்கு தேவையான ஆவணங்களுடன் ஏபிஒய் -எஸ்பி கிளையில் சந்தாதாரர் சமர்ப்பிக்க வேண்டும். படிவத்தை https: //www.npscra.nsdl.co.in/nsdl-forms.php இலிருந்து இணையத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- ஆட்டோ டெபிட்டின் காலத்தினை மாற்ற உதாரணத்திற்கு காலாண்டு பங்களிப்பிலிருந்து மாதாந்திர பங்களிப்பாக அல்லது அரையாண்டு பங்களிப்பிலிருந்து காலாண்டு பங்களிப்பாக மாற்ற , ஏபிஒய்_சந்தாதாரர் ஏபிஒய்_-எஸ்பி கிளைக்கு எழுத்துப்பூர்வ கோரிக்கையைச் சமர்ப்பித்து மாற்றங்களை எந்த நேரத்திலும் செய்து கொள்ளலாம்
- ஏபிஒய்_சந்தாதாரர்களுக்காக ஆதார் சீடிங் அம்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதில் சந்தாதாரர்கள் ஏபிஒய்_கணக்கில் நிகழ்நேர அடிப்படையில் ஆதாரை https://www.npslite-nsdl.com/CRAlite/ >> Aadhaar Seeding for APY subscribersமூலம் புதுப்பித்துக் கொள்ளலாம்

## ஓய்வூதியத் தொகையை மேம்படுத்துதல்/குறைத்தல்

- ஏபிஒய் சந்தாதாரர்கள் ஆண்டு முழுவதும் தங்கள் ஓய்வூதியத் தொகையை " ஏபிஒய் சந்தாதாரர் மாற்றியமைக்கும் படிவத்தை" ஏபிஒய் எஸ்பி கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் ஓய்வூதியத் தொகையை மேம்படுத்தலாம்/குறைக்கலாம் இந்த படிவம் https://www.npscra.nsdl.co.in/>>Home>>Atal Pension Yojana>>Forms>>Subscriber Maintenance>> உள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உத்தரவாத ஓய்வூதியத் தொகையின்படி வேறுபாட்டுத் தொகையை டெபாசிட் செய்ய/ திரும்பப் பெறுவதைச் சரிபார்க்க இந்த அம்சம் பயனருக்கு உதவுகிறது..
- மேமபடுத்தும் போது வேறுபாட்டுத் தொகை டெபாசிட் செய்யப்பட வேண்டும் , குறைக்கும் போது வேறுபாட்டுத் தொகை சந்ததராருக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.
- ரீ-ஃபிக்சேஷன் எனும் புதிய ஓய்வூதிய மேம்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தற்போதைய வயது மற்றும் வேறுபடும் ஓய்வூதிய தொகையின் அடிப்படையில், பங்களிப்பு செலுத்தப்படும். இதில், மொத்தமாக வேறுபாடு தொகை எதுவும் டெபாசிட் செய்யத் தேவையில்லை.

## ஏபிஒய் யிலிருந்து வெளியேறுதல்

- **சுய விருப்பத்தில் வெளியேறுதல் (60 வயதுக்கு முன் வெளியேறுதல்):** ஏபிஒய் கணக்குகளை மூடுவதற்கு முறையாக நிரப்பப்பட்ட “கணக்கு மூடல் படிவம் (சுய விருப்பத்தில் வெளியேறுதல்)” மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை சம்பந்தப்பட்ட ஏபிஒய் -எஸ்பி கிளையில் சமர்ப்பிக்க வேண்டும். இப்படிவம் : **www.npscra.nsdl.co.in>>Home>>Atal Pension Yojana>>Forms>>Withdrawal Form>>Voluntary exit APY withdrawal form** இல் உள்ளது. . இது ஏபிஒய் -எஸ்பி கிளையிலும் கிடைக்கும். ஏபிஒய் கணக்கு மூடப்பட்டாலும், ஏபிஒய் கணக்குடன் இணைக்கப்பட்ட சேமிப்பு வங்கிக் கணக்கை சந்தாதாரர் மூடக்கூடாது, ஏனெனில் சந்தாதாரர் பெற வேண்டிய கடைசி வருமானம் ஏபிஒய் உடன் இணைக்கப்பட்ட சேமிப்பு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படும். ஏபிஒய் மூடும் வருவாயை கிரெடிட் செய்வதற்கு முன் சேமிப்பு வங்கிக் கணக்கை மூடுவது, வெளியேறிய சந்தாதாரர் தொகையைப்

பெறுவதில் சிக்கல்களை உருவாக்கலாம்.

- **<u>ஏபிஒய் கணக்கு சந்தாதாரர் 60 வயதிற்கு முன் இறந்தால்</u>**: அசல் சந்தாதாரர் 60 வயதை அடையும் வரை சந்தாதாரரின் ஏபிஒய் கணக்கில் பங்களிப்பைத் தொடர அவரது துணைவருக்கு உரிமை உள்ளது. அதைத் துணைவரின் பெயரில் பராமரிக்கலாம் . அவருக்குத் தொடர விருப்பமில்லையெனில் , அவருக்கு இதுநாள் வரை சந்தாதாரர் செய்த பங்களிப்புகளின் மொத்தம் அதாவது அவரது கணக்கில் சேர்ந்துள்ள ஓய்வூதியம் (கணக்கு பராமரிப்புக் கட்டணங்களைக் கழித்த பிறகு ) நிகர உண்மையான வட்டியுடன் திருப்பித் தரப்படும்.
- **<u>இறப்பு காரணமாக வெளியேறுதல்</u>**: உரிமை கோருபவர், சம்பந்தப்பட்ட ஏபிஒய் -எஸ்பி கிளையில் இறப்புச் சான்றிதழின் நகலுடன் முறையாக நிரப்பப்பட்ட "ஏபிஒய் மூடல் படிவத்தை (இறப்பு)" சமர்பிக்க வேண்டும். படிவம் www.npscra.nsdl.co.in>>Home>>Atal Pension Yojana>>Forms>>Withdrawal Form>>APY death form இல் உள்ளது. இது ஏபிஒய் -எஸ்பி கிளையிலும் கிடைக்கும்.

**<u>ஏபிஒய் கைப்பேசி பயன்பாடு</u>**

- ஏபிஒய் கைப்பேசி பயன்பாடு ஏபிஒய் பயனர்களுக்கு இலவசமாகக் கிடைக்கிறது, இதில் சமீபத்திய 5 பங்களிப்புகளைச் சரிபார்க்கலாம் மற்றும் பரிவர்த்தனை அறிக்கை மற்றும் e-PRAN ஐ எப்போது வேண்டுமானாலும் எந்தக் கட்டணமும் செலுத்தாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆண்ட்ராய்டு பயனர்கள் ஏபிஒய் கைப்பேசி செயலியை கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து 'APY மற்றும் NPS Lite' என டைப் செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- APY chat bot இன் புதிய அம்சம் கைப்பேசி பயன்பாட்டில் நேரலையாக உள்ளது, இது குறைந்த குறுக்கீட்டில் நிகழ்நேரத்தில் கேள்வில்களைத் தீர்க்க உதவுகிறது.
- ஓய்வூதிய மேம்படுத்தும்/குறைக்கும் கால்குலேட்டர் கிடைக்கும்.

**<u>ஏபிஒய் இன் கீழ் தகவல் தேடுதல் மற்றும் குறைகளை எழுப்புதல்</u>**

- சந்தாதாரர்கள் ஏபிஒய் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெற Protean CRA-Atal Pension Yojana உதவி மையத்தை (கட்டணம் இலவசம்) 1800 889 1030 இல் அழைக்கலாம்.
- APY chat bot இன் புதிய அம்சம் இணையத்தில் நேரலையாக உள்ளது , இது குறைந்த குறுக்கீட்டில் நிகழ்நேரத்தில் வினவல்களைத் தீர்க்க உதவுகிறது.
- ஏபிஒய் கணக்கு / பங்களிப்பு தொடர்பான அனைத்து கேள்விகளையும் ஏபிஒய் -எஸ்பி கிளையிலும் கேட்கலாம்.
- www.npscra.nsdl.co.in >>Home >> select: NPS-Lite or through CGMS மூலம் சந்தாதாரர் எங்கிருந்தும் குறைகளை இலவசமாக தெரிவிக்கலாம்.
- குறையை தெரிவிக்கும் சந்தாதாரருக்கு அக்குறைக்கான டோக்கன் எண் வழங்கப்படும். "ஏற்கனவே பதிவு செய்த புகார் / விசாரணையின் நிலைமையைப் பார்த்தல்" என்பதன் கீழ் சந்தாதாரர் குறையின் நிலையைச் சரிபார்க்கலாம்.

**<u>ஏபிஒய் சமூக ஊடக பக்க இணைப்புகள்</u>**

| APY, PFRDA பக்கம் | PFRDA பக்கம் |
|---|---|
| ▪ **FACEBOOK** https://www.facebook.com/OfficialAPY/<br><br>▪ **You Tube link of APY KI PATHSHALA -** https://www.youtube.com/channel/UC5SuHg-O6ipH1J_HTfU17ug | ▪ **LINKEDIN** https://www.linkedin.com/in/pfrda-pension-fund-regulator-of- india-051614168/?originalSubdomain=in<br>▪ **YOUTUBE** https://www.youtube.com/channel/UCLMx1eZWY-LDeyIWCwYu15Q<br>▪ **TWITTER** https://twitter.com/pfrdaofficial?lang=en |

**<u>மேலும் விவரங்களுக்கு: இவற்றை அணுகவும்</u>**

**PFRDA** இணையதளம்: *https://www.pfrda.org.in/*>>NPS>>Atal Pension Yojana>>APY Scheme details, *https://www.pfrda.org.in/*>>NPS>>Atal Pension Yojana>>FAQs

**Protean- CRA** இணையதளம்: *www.npscra.nsdl.co.in*>>Home>>Atal Pension Yojana>>Introduction>>APY Scheme details, *www.npscra.nsdl.co.in*>>Home>>Atal Pension Yojana>>FAQ's>>APY FAQ's

**NPS Trust** இணையதளம்: *http://www.npstrust.org.in* >>Atal Pension Yojana >>APYSchemedetails.pdf, *http://www.npstrust.org.in* >>Atal Pension Yojana >>APYFAQs10092015.pdf

குறிப்பு: இந்த கையேட்டை ஆங்கிலத்திலிருந்து மற்ற மொழிகளுக்கு மொழிபெயர்க்கும் போது அர்த்தங்களில் ஏதேனும் குழப்பம் ஏற்பட்டால், ஆங்கில பதிப்பின் அர்த்ததையே எடுத்துக்கொள்ள வேண்டும்.

## QR CODE

1. APY MOBILE APP
2. APY PODCASTS

a) Downloading APY transactionstatementande PRAN

b) E-APY Process